# போகிற போக்கில்...

## Catch – 22

தனஞ்ஜய் சட்டர்ஜிக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை முன் வைத்து நான் எழுதியிருந்த விஷயங்களுக்கு மறுப்பாக சில கருத்துக்களைக் கூறினார் என் நண்பர் இளம்பரதி. அவர் ஒரு வழக்கறிஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் கூறியவற்றின் சுருக்கம் இது:

அந்தக் கொலையையும் கற்பழிப்பையும் தனஞ்ஜய்தான் செய்தார் என்பதற்கு சாட்சியங்கள் போதுமானதாக இல்லை. அப்படியிருக்கும்போது, ஒரு வேளை தனஞ்ஜய் அந்தக் குற்றத்தைச் செய்திராத பட்சத்தில் மரணதண்டனை என்பது எத்தகையதொரு அநீதி! அந்த அநீதிக்கு இந்த அரசும், சமூகமும், நாமும்தானே காரணம்? உதாரணமாக, பாராளுமன்றத் தாக்குதல் விவகாரத்தில் கைதான தில்லியைச் சேர்ந்த பேராசிரியர் கிலானி முதலில் மரணதண்டனை விதிக்கப்பட்டார். பின்னர் அவர் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டார். ஒரு வேளை கிலானி தூக்கிலிடப்பட்டிருந்தால் ஒரு நிரபராதியை அநியாயமாகக் கொன்ற கொடூரத்தைச் செய்தவர்களாகியிருப்போம் அல்லவா? எக்காரணம் கொண்டும் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதுதானே நீதியின் அடிப்படை தர்மம்?

–இதுதான் இளம்பரதியின் வாதம். அவருடைய வாதம் நியாயமானதுதான். ஆனால், சாட்சியம் ஏதும் இருக்கக் கூடாது என்பதற்காகவே வன்கலவியில் ஈடுபடும் குற்றவாளிகள் தங்கள் வெறியைத் தீர்த்துக் கொண்ட பிறகு அந்தப் பெண்களை குரூரமாகக் கொன்று விடுகிறார்கள்.

சமீபத்தில் சென்னையில் நடந்த இரண்டு சம்பவங்கள். அண்ணா நகரில் அடுக்கு மாடிக் குடியிருப்பில் காலை பத்தரை மணி அளவில் ஒரு இளம் பெண் மிக குரூரமான முறையில் சொல்லப்பட்டார். ஒரே வாரத்தில் போலீஸ் குற்றவாளியைக் கண்டு பிடித்து விட்டது. அந்தப் பெண்ணின் வீட்டில் சென்ற ஆண்டு கார் டிரைவராக இருந்த ஒருவர் தான் இக்கொலையைச் செய்திருக்கிறார். அப்பெண்ணை வன் கலவி செய்ய முயன்று அது முடியாமல் போகவே அவரது தலையை சுவரில் மோதி அவர் கீழே விழுந்ததும் கழுத்தில் காலை வைத்து மிதித்தே கொன்றிருக்கிறார். கொன்ற பின் வீடு முழுவதும் மிளகாய்ப் பொடி தூவிவிட்டு மறைந்து விட்டார் கொலையாளி. மோப்ப நாய்களைக் குழப்புவதற்காக குற்றவாளிகளால் பயன் படுத்துப்படுவது மிளகாய்ப் பொடி. வெகு கவனமாகத் திட்டமிட்டு இந்தக் கொலையைச் செய்திருக்கிறார் அந்த நபர். போலீசார் இந்த மிளகாய்ப் பொடியை வைத்தே குற்றவாளியைக் கண்டு பிடித்து விட்டனர்.

மற்றொரு சம்பவம். அம்பத்தூரில் வேலை செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு பெண் வன் கலவி செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். மூன்று பேரால் வன் கலவி செய்யப்பட்டிருப்பதாக பிரேதப் பரிசோதனை அறிக்கை கூறுகிறது. அந்தப் பெண்ணின் காதலரும் அரவது இரண்டு நண்பர்களுமே அதைச் செய்திருப்பதாக போலீஸார் சந்தேகப் படுகின்றனர். அந்த மூவரும் போலீசாரால் பிடிபடவில்லை. தலைமறைவாக உள்ளனர்.

இவர்களெல்லாம் மரணதண்டனைக்கு உரியவர்களே என்பது என்னுடைய திண்ணமான கருத்து.

தனஞ்ஜய் சட்டர்ஜி பற்றி குஷ்வந்த் சிங் எழுதியிருந்ததைப் படித்தேன். மரண தண்டனை நீக்கப்பட வேண்டும் என்பது குஷ்வந்த் சிங்கின் கருத்து. ஆனால், அதற்குப் பதிலாக வன் கலவிக் குற்றவாளிகளுக்கு குஷ்வந்த் சிங் சிபாரிசு செய்யும் தண்டனை என்ன தெரியுமா? அது மரணதண்டனையை விட கொடூரமானது. குற்றவாளிகளின் ஆணுறுப்பைத் துண்டித்து விட வேண்டும். பொது மக்கள் முன்னிலையில் கசையால் அடிக்க வேண்டும்!

*******



சாரு நிவேதிதா

### ரஜினி சார்!

சமீபத்தில் ஒரு கவிதை வெளியீட்டு விழாவுக்காக கோழிக்கோடு (கேரளா) சென்றிருந்தேன். சென்று இறங்கியதும் ஓர் இன்ப அதிர்ச்சி. ஏழு அடி உயர சுவரொட்டியில் என் புகைப்படம். சரியாகச்சொன்னால் அது சுவரொட்டி கூட அல்ல. வெல்வெட் துணியால் தயாரிக்கப்பட்ட தொங்கும் சீலை. ஆச்சரியத்துடன் கேட்டபோது நான்தான் பிரதம விருந்தாளி என்றார்கள். யோசித்துப்பார்த்தபோது ஒரு விஷயம் புரிந்தது – தமிழ்நாட்டில் சினிமா நடிகர்களைக் கொண்டாடுகிறார்கள். கேரளாவில் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டாடுகிறார்கள். இதனாலேயே தமிழர்களைச் சற்று இளக்காரமாகப் பார்க்கும் தன்மை கேரளாவில் காணப்படுகிறது. ஒரே ஒரு உதாரணம் கூறினார் நண்பர். ஜெயலலிதாவின் ஆஸ்தான ஜோதிடர் கோழிக் கோட்டில் வசிக்கிறார். அவருக்கு கேரள அரசாங்கம் போலீஸ் பாதுகாப்பு தரவேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக் கொண்டதாம். முடியாது என கேரள அரசு மறுத்து விடவே தமிழக அரசு தங்கள் மாநில போலீசை சோதிடரின் பாதுகாப்புக்கு அனுப்பியிருக்கிறது. மலையாள சோதிடரின் வீட்டு வாசலில் நின்று கொண்டிருக்கும் தமிழ்நாட்டுப் போலீஸ்காரர்களை ப∴பூன்களைப் பார்ப்பது போல் பார்த்துச்சிரிக்கிறது கேரளம்.

சினிமாவே தமிழக அரசியலிலும், தமிழ்ச் சமூக வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் நீக்கமற நிறைந்திருப்பது கேரள மக்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகி வருகிறது.

இது பற்றி யோசித்துக் கொண்டிருந்த போது தமிழர்களின் வேறு சில குணாம்சங்கள் பற்றியும் என் நினைவுக்கு வந்தது. முக்கியமாக, அவர்களின் அடிமை மனோபாவம். மதுரை போன்ற ஒரு சில மாவட்டங்கள் விதி விலக்காக இருக்கலாம். மற்றபடி, அடிமை மனோபாவம் தமிழர்களின் ரத்தத்திலேயே ஊறியிருப்பதாகத் தோன்றுகிறது. தில்லியின் அரசாங்கக் கட்டிடங்களில் தமிழநாட்டு குமாஸ்தாக்களே நிரம்பி வழிகிறார்கள். கடவுள், கறுப்பின மக்களை இசைக் கலைஞர்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும் படைத்தது போல், தமிழர்களை குமாஸ்தாக்களாகவே படைத்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றும் விதத்தில் இருக்கும் அவர்களது அங்க சேஷ்டைகள்! அதிகாரிகளின் முன்னால் அவர்களின் அங்கங்கள் எப்படியெல்லாம் கோணுகின்றன என்பதை நீங்கள் நேரில் பார்க்க வேண்டும். அப்போது தான் நான் சொல்வது விளங்கும்.

இந்த மனோபாவத்தினாலேயே அவர்கள் தமிழை மறந்து ஆங்கிலத்தைத் தங்கள் 'கிச்சன்' மொழியாக ஏற்றுக் கொள்ள முனைகிறார்கள். உலகில் எந்த மூலையிலும் ஒரு தமிழன் மற்றொரு தமிழனைச் சந்திக்க நேர்ந்தால் ஆங்கிலத்திலேயே சம்பாஷனையைத் துவக்குவதை நீங்கள் அறிந்திருக்கலாம்.

தமிழில் பேச அவ்வளவு கூச்சம். அவ்வளவு தாழ்வு மனப்பான்மை. இதுதான் அவர்களின் அடிமை மனோபாவத்துக்குக் காரணம். இதற்குத் தமிழ் எழுத்தாளர்கள் மட்டும் விதி விலக்காகி விடுவார்களா என்ன? சமீபத்தில் ஒரு தமிழ் எழுத்தாளர் 'ரஜினி சார், ரஜினி சார்' என்று பத்திரிகையில் எழுதியதையும் தமிழர்களின் ஒட்டு மொத்தமான இந்தக் கூழைக் கும்பிடு மனோ பாவத்துடன்தான் இணைத்து வாசிக்க வேண்டும்!

*****

### இளவரசிகள், பட்டத்து ராணிகள்!

சமீபத்தில் நான் வாசித்த இரண்டு விஷயங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒன்று, தமிழின் இளம் கவிஞர்களிடையே முக்கியமானவர்களுள் ஒருவராக நான் கருதும் சங்கர ராம சுப்ரமணியனின் 'இரட்டை இளவரசிகள்' என்ற கவிதை:

இப்போதுதான்
பறக்கத் தொடங்கியுள்ள
அவளின் இறகு முலைகளுக்கு
மிஸ். ரைட்
மிஸ். லெ∴ப்ட் என்று பெயரிட்டேன்
மிஸ். லெ∴ப்டை விட
மிஸ். ரைட் கொஞ்சம் பெரியவள்
என் விரல்கள்
(வாகாய் இருப்பதால்)
மிஸ். ரைட்டையே வருடிக்கொண்டிருப்பதை
பார்த்து
மிஸ். லெ∴ப்டுக்கு கோபம் வரும்..
அப்போது
மிஸ். லெ∴ப்டையும் வருடிக்கொடுத்து
சமாளிப்பேன்.
படுக்கைவாகில்
மிஸ். லெ∴ப்டும்
மிஸ். ரைட்டும்
வடிவத்தில் என்னைக் குழப்பி விடுவதுண்டு
விரல்கள் அணைத்து குவிக்கும் போது
மிஸ். ரைட்டும்
மிஸ்.லெ∴ப்டும் நன்கு வெளிப்படுவர்
அவர்கள் இருவரையும்
மிஸ் என்று அழைப்பது கூட
சற்று அதிகப்படியானது தான்...
வளர்ந்த சிறுமிகள்
அவ்வளவுதான்.
அவர்கள் அப்படி அழைக்கப்படவே
விரும்புகின்றனர்.
இரு பறவைகள் முட்டுவதாய்
செல்வி. ரைட்டையும், லெ∴ப்டையும்
நான் மோதவிடுவேன்
வெளியே நகரத்தில் பிரளயம் தொடங்கும்
சாக்லெட்டை சுற்றியிருக்கும்
தங்க ரேப்பரை நேர்த்தியாய் பிரித்து
தொப்பி அணிவித்து
மிஸ். ரைட்டையும்
மிஸ். லெ∴ப்டையும்
இரட்டை இளவரசிகள் ஆக்குகிறேன்
தந்தையின் ஆதுரத்துடன்
கோதுகிறேன்
விரைத்தும்
முளைத்தும்
ஒரு முடிவுறாப் பாதைக்கு
அழைக்கும்
அவர்கள் இருவருக்கும் மென்மையான
பற்குறி ஒன்றை பரிசளிக்கிறேன்.

***

அந்த அரசரின் பெயர்: ம்ஸ்வாதி. அவருக்கு முன்னே இருபதாயிரம் இளம் பெண்கள் நடனமாடுகிறார்கள். எதற்காக? அந்த இளம் பெண்களில் ஒருத்தியை அவர் தனது மனைவியாகத் தேர்ந்தெடுப்பார். ஏற்கனவே திருமணமான அரசர்தான். ஒன்றல்ல, ஒரு டஜன் மனைவிகள் அவருக்கு. இப்போது தனது பதின்மூன்றாவது மனைவியைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த நடன நிகழ்ச்சி.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த சரித்திர சம்பவம் என்று நினைத்து விடாதீர்கள். மிகச் சமீபத்தில் ஒரு வாரத்துக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி அது. அந்த நாட்டின் மக்கள் மிகக் கொடூரமான வறுமையில் வாழ்ந்து கொண்டுள்ளனர். தொழிற்சங்கங்களும், மனித உரிமைக் குழுக்களும் அரசரின் ஆடம்பரங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அரசர் ம்ஸ்வாதியின் வயது 36. அவரது கண் பார்வை தன் மீது விழ வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவர் முன்னே நடனமாடிய 20000 இளம் பெண்களுள் ஒருத்தியைத் தேர்ந்தெடுக்கிறார் அரசர். அந்த 16 வயதுப்பெண் அந்த நாட்டின் அழகியாக ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர். அரசரின் பதின்மூன்றாவது மனைவியாக அறிவிக்கப்படுவதற்கு முன் அவர் எயிட்ஸ் பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்படுகிறார்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)


# ச. ஜெயரட்ணம்

பதிவு செய்யப்பட்ட வருமானவரி ஆலோசகர்

**2004 வருமான வரிப்பத்திரங்களை உடனுக்குடன் பூர்த்தி செய்து மேலதிக வரிப்பணத்தை 14 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்**

**14 DAYS REFUND**

***For all your income tax and Business Development needs***

There is no better place than ours
For 14 days Refund

**S. Jeyaratnam**

B.Business. FTIA, JP

**Registered Tax Consultant**

***1/9-11 Rochester Street, HOMEBUSH, NSW 2140 Tel: (02) 9746 0092***

*($55 flat charge for salary & wages with <$300 deductions)*
*(Opposite to Homebush Primary School)*